

ஸ்ரீ:




நீரவளூர்
ஸ்ரீவீற்றிருந்த லக்ஷ்மீநாராயணப்பெருமாள்

முதல் பதிப்பு 1966
இரண்டாம் பதிப்பு 2007

2-ம் பதிப்பு அச்சிட்டவர்:
ஸ்ரீராகவஸிம்ஹம் பிரஸ்,
16/36, மாரி செட்டித தெரு,
மந்தைவெளி, சென்னை-28
தொலைபேசி: 24641225







ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீமதாதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶடகோப

ஸ்ரீஷஷ்டபராங்குஶயதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶடகோப

ஸ்ரீவேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீமுகம்

ஸ்ரீ அஹோபிலமடம்
(முகாம்) முக்கூர் தேதி 11-3-1966

"வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:" என்று நம் தூப்புல் துரந்தரனால் கொண்டாடப்பட்ட "முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிக்கு" ஸமீபத்தில் உள்ளதும், ஸ்ரீமதஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தில்

6-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகனால் 1503-ம் வருஷம் "ஸ்வஸ்திகம்" எனப்படும் லக்ஷணப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான **ஸ்ரீபாஷ்யபுரம்** என்கிற **நீர்வளூர்** அக்ரஹாரத்தில் உள்ள **ஸ்ரீ வீற்றிருந்த லக்ஷ்மீநாராயணப் பெருமாள்** கர்ப்பக்கிருஹ விமானம் நிர்மாணித்து வெகுகால மானபடியால் சிதிலமாகி யுள்ளதை புதுப்பித்துக் கட்ட பகவந்நியமனத்தின்பேரில் நீர்வளூர் அக்ரஹார வாஸிகள் ஆரம்பிக்கிறபடியினால் ஆஸ்திகமஹாசயர் கள் ஷ கைங்கர்யத்தில் யதாசக்தி அந்வயித்து கிருதார்த்தர்களாக வேண்டியது. ஸ்ரீபாஷ்யபுர ஸ்தல புராணத்தையும் ஸ்ரீஅழகியசிங்கர் கடாக்ஷித்தாயிற்று.

ஸ்ரீநியமனம்

ஜோ. ரங்காச்சாரியார்

ஸ்ரீகார்யம்

—

ஸ்ரீ:

முகவுரை

ஸ்ரீ (ஷஷ்ட) பராங்குச யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஆஸ்திகர்கட்கும் வாசகர்களுக்கும் ஆராய்ச்சியாளர் களுக்கும் ஒரு வேண்டுகோள். இப்புத்தகத்தில் "ஸ்ரீபாஷ்ய புர" மாஹாத்மியமும், 6-வது பட்டம் ஸ்ரீஅழகிய சிங்கர் வைபவமும் முற்றும் அடங்கியிருப் பதாக நான் பெருமைப்பட முடியாது. 1503-ம் வருஷம் ஸ்ரீஅஹோபிலமடம் 6-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்த ராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் மந்திரமஹிமையினால் கிராமம் நிர்மாணம் செய்து அதில் சொப்பன மூலம் கண்டெடுத்து ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்ட ஸ்ரீவீற்றிருந்தப் பெருமாள் அதிக சக்திவாய்ந்தவர். தவிரவும் ஸ்ரீ அழகியசிங்கர் 10 ஸம்வத்ஸரம் இந்த அக்ரஹாரத்தில் எழுந்தருளி யிருந்ததாக ஸ்ரீஸன்னிதி குருபரம்பரையில் ஸேவிக்கிறோம். இந்த எம்பெருமானிடம் அநேகர் ப்ரார்த்தனைகள் செய்து ஸித்தியடைகிறார்கள். பிசாசு முதலிய பாதைகளும் நிவ்ருத்தியடைகின்றன. ஸ்ரீவீற் றிருந்தபெருமாள் தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் அடி யேனையும் அழைத்துக்கொண்டு முக்கூரில் எழுந் தருளியிருக்கும் 44-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கரிடம் ஸ்தல மாஹாத்மியக் குறிப்பு ஒன்று வேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீஅழகியசிங்கர் தமது சிஷ்யர்களால் கொடுக்கப்படும் குறிப்புகளைக்கொண்டு தொகுக்கும் படி அடியேனை நியமித்தாயிற்று. அடியேன் பயந்தேன். ஸ்ரீஅழகியசிங்கர் பூர்ணகடாக்ஷம் பண்ணி மந்த்ரா க்ஷதை அனுக்ரஹித்து யாவும் சரியாகவே உமக்குத் தோன்றும் என்றும், யாவரும் ஸ்ரீஸன்னிதிசிஷ்யர்களே

என்றும் நியமித்ததை மறுக்கமுடியாமல் மந்திராக்ஷதை பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன். ஸ்ரீஅழகியசிங்கர் அனுக்ரஹத்தால் எனக்குக் கிடைத்த கீழ்க்கண்ட 1. ஸ்ரீஸன்னதி குருபரம்பரை, 2. சிலாசாஸனங்கள், 3. ஓலைச்சுவடிகள், 4. விஜயநகரஸாம்ராஜ்யசந்திரிகா, 5. ஸ்ரீஷஷ்டபராங்குசயதீந்த்ரவைபவ ப்ரகாசிகை, 6. ஆதீன தர்மகர்த்த நடவடிக்கைக் குறிப்புகள், 7. ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸ்ரீபாஞ்சராத்ர வைகானஸ ஆகமங்கள் இவைகளையும் இவ்வூரில் உள்ள பெரியோர்களின் கர்ணபரம்பரைச் செய்திகளையும் ஆதாரமாகக்கொண்டு இதை தொகுத்துள்ளேன். இதில் குற்றங்கள் இருக்கக் கூடும். ஸ்ரீஅழகியசிங்கரும் மற்றும் வாசகர்களும் என்னை மன்னித்து ஏதேனும் சரித்ரம் விட்டுப் போயிருந்தாலும் அதைத் தெரிவித்தால் மறுபதிப்பில் சேர்க்க யத்தனிப்பேன். இதை எழுதத்தூண்டின ஸ்ரீவீற் றிருந்தப் பெருமாள் ஆதீனதர்மகர்த்தா கமிட்டிக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தின பேரில் திருவள்ளூர் ஸ்ரீவீர ராகவன் ஸன்னதி ஏஜெண்டும், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதகருமான ஸ்ரீ.உ.வே. வித்வான் புரிசை நடாதூர் கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமிக்கும் இதை சோதனை செய்துகொடுத்த அர்ச்சகர் அத்தி நரசிம்ஹாசாரியார் ஸ்வாமிக்கும், ஸ்ரீமாலோல முத்ராலயத்தாருக்கும் எனது மனமார்ந்த ப்ரணாமங்கள்.

ஸ்ரீபாஷ்யபுரம் என்னும் நீர்வளூர்
25-7-1966

இப்படிக்கு
இளநகர் திருமலை கட்டம்
விஜயராகவ தாஸன்
ஆராதகர்,
வீற்றிருந்தபெருமாள் தேவஸ்தானம்

குறிப்பு: நீர்வளூர் (ஸ்ரீபாஷ்யபுரம்) அக்ரஹாரம் சென்னை - பெங்க ளூர் டிரங் ரோடில் 37.3 லிருந்து 1 மைலில் உள்ளது. சென்னையில் இருந்து பஸ் வசதி உள்ளது.

ஸ்ரீ:

ஸ்ரீலக்ஷ்மீநாராயண பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஷ்யபுரம் என்னும் நீர்வளூர்

ஸ்தலபுராணம்

முன்னுரை

கர்மங்களுக்குப் பலனைக் கொடுக்கும் இக்கர்ம பூமி யில் ஜனித்தவைகளுள், அறிவைப் பெற்றிருப்பதால் மனிதர்கள் ச்ரேஷ்டர்கள். அவர்களிலும் வேதாந்த ஜ்ஞானம் உடையவர்கள் சிரேஷ்டர்கள். வேதாந்த ஜ்ஞானமானது ஸதாசார்யகடாக்ஷத்தாலும் அனுக்ரஹத் தாலுமே வரக்கூடியது. தத்த்வ ஜ்ஞானங்களைப் போதிக்கும் ஸதாசார்ய பரம்பரையில் ஸ்ரீமத் அஹோபில மடத்தில் ஸ்ரீ அழகியசிகர்கள் அவதரித்து சிஷ்யர்களுக்கு வேதாந்தார்த்தங்களை உபதேசித்த வருகின்றார்கள். அவ்வாஸ்தான பரம்பரையில் அவதரித்து ஜகத்விக்யாத கீர்த்தியுடனும் எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களாலும் கொண்டாடும்படி எழுந்தருளியிருந்த ஸ்ரீ பிள்ளைப் பாக்கம் அழகியசிங்கர் ஸஞ்சாரமாய் ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகனால் (6-ம் பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர்) பிரதிஷ்டை செய்யப்பட்ட ஐந்து அக்ரஹாரங் களில் ஒன்றான நீர்வளூர் அக்ரஹாரத்திற்கு எழுந்தருளி யாயிற்று.

அங்கு அநேக சிஷ்யர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை ஆச்ரயித்து க்ருதார்த்தர்களானார்கள். அவ்வூரில்

எழுந்தருளியிருக்கும் ஸமயம் காலக்ஷேப கோஷ்டியில் ஸ்ரீபாஷ்யபுரம் என்று அவ்வூருக்குப் பெயர் வந்த காரணத்தையும், ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் அவ்வூரில் செய்தருளிய அத்யாச்சர்யமான காரியங்களையும் மிக ரஸமாகவும் பக்தி பரவசராகவும் அருளிச்செய்ததை அவ்வூர் வாஸிகளான வயோதிகர்கள் சொல்லக்கேட்டு, அவ்விஷயங்களை ஒன்று சேர்த்து அம்மாஹாத்மியத்தை இங்கு வெளியிடுகின்றேன்.

அவ்வூர் பெரியோர்கள் தாங்கள் கர்ண பரம்பரையாகக் கேட்டுவந்த கதைகளைமட்டும் தெரிவிக்காமல் அதற்கு சான்றாக கல்வெட்டு, ஓலைச்சுவடி, தர்மகர்த்தா நடவடிக்கை குறிப்புகள் முதலியவைகளையும் காண்பித்துள்ளார்கள். ஆகையால் இங்கு அடியேன் விஜ்ஞாபிப்பதில் அத்யுக்தியோ அதிசக்தியோ ஒன்றுமில்லை. அவ்வோ இடங்களில் அடியேனுக்கு சொல்லியும் காண்பித்துமுள்ள கல்வெட்டு முதலியவைகளை வெளியிட்டு இதை வாசிக்கும் மஹான்களுக்கு இவ்விஷயத்தில் பூர்ணமான திருப்தியை உண்டாக்க ஸித்தமாக இருக்கிறேன். சிறியவனான அடியேனுடைய அஜ்ஞானத்தால் ஏற்படும் குறைகளை நீக்கி குணங்களைக் கொண்டு அடியேனை அனுக்ரஹிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ நாராயண பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப
ஸ்ரீ (ஷஷ்ட) பராங்குச யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப
ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக
யதீந்த்ர மஹாதேசிகாய நம:

யஸ்யாபவத்பக்தஜனார்த்திஹந்து:
பித்ருத்வம் அந்யேஷு அவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே அவதார: தம் அனன்யலப்யம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥

ஸ்ரீபாஷ்யநகராதீச: ஸர்வாபீஷ்டபலப்ரத: ।
லக்ஷ்மீநாராயண: ஸ்ரீமான் ச்ரேயஸே மேஸ்து பூயஸே ॥

இன்பம் பயக்க எழில் மலர்மாதரும் தானும் இவ்வேழுலகை
இன்பம்பயக்க அனிதுடன் வீற்றிருந்து ஆள்கின்ற
எங்கள்பிரான்
அன்புற்றமர்த்துறைகின்ற அணிபொழில்சூழ்
திருவாறன்விளை
அன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழு நாள்களு
மாகுங்கொலோ

மாஹாத்ம்ய ப்ராரம்பம்

பூர்வத்தில் லோகோஜ்ஜீவநார்த்தம் ஸர்வேச்வரன் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் எடுத்தபிறகு மஹாகர்வங் கொண்ட பலியின் தர்ப்பத்தை அடக்க வாமனனாய் அவதரித்து மூன்றடி மண் யாசித்து உலகளந்த பெருமானாய்த் தோன்றி பலியை நிக்கிரஹித்து பிறகு பலியினால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டு,

ஸ்ரீபலிருவாச:-
யதா வாமனரூபேண யாசிதம் யத் திரிவிஷ்டபம் ।
தேந வாமனரூபேண ப்ரச்சந்னோபவ மோக்ஷத: ॥
(இதி வாமனவைபவப்ரகாசிகாயாம் வாமனபுராணே)

ஸ்ரீவைகுண்டத்தில் ஸேவை ஸாதிக்கும்படியான ரூபத்துடன் திருக்குரளப்பனாய் ஸேவை ஸாதித்தருள வேணும் என்று விஜ்ஞாபிக்கப்பட்டான். ஸ்ரீபகவானும் பலியின் திருமுடியின்மேல் வைத்த பாதத்தை மடக்கிக் கொண்டு சங்கசக்ரஹஸ்தனாய் அபயமோக்ஷ ஹஸ்தத்தோடு ஸ்ரீதேவிமார்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்துடன் ஸேவைஸாதித்தருள அந்த திருக்குறளப்பனை வெகுகாலம் மஹாபலிச்சக்ரவர்த்தி பாதாள லோகத்தில் ஆராதித்து வந்தான்.

ஒரு கல்பகாலத்திற்குப் பிறகு "திருவாறன் விளை" என்னும் திவ்யதேசத்தில் வியாக்ராசுரன் தேவர்கள் முதலிய யாவரையும் மிகவும் ஹிம்சித்து வந்தான். அதனால் மிகவும் துயரமடைந்த ப்ரம்மாவானர் தேவதைகளுடன் பகவானை பிரார்த்திக்க பகவானும் வாமனாய் ப்ரஸன்னமாகி தேவதைகளின் பிரார்த்தனையின் பேரில் வயாக்ராசுரனை ஸம்ஹரித்தார். பிறகு ப்ரஹ்மாவின் வேண்டுகோளுக்கு இணங்கி "திருவாறன்விளை" என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் வீற்றிருந்த திருக்கோலத்துடன் நித்யவாஸம் செய்தருளினான். இந்த திவ்யக்ஷேத்ரம் 108

(குறிப்பு : முதல் பாசுரத்தில் " .... இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள்பிரான் ......" என்று வீற்றிருந்த திருக்கோலத்தில் எம்பெருமானை மங்களாசாஸனம் பண்ணியுள்ளார்.

திருப்பதிகளுக்குள் ஒன்றாய் ஸ்ரீநம்மாழ்வாரால் இன்பம் பயக்க .." என்ற தசகத்தால் மங்களாசாஸனம் செய்யப்பட்டதாகும்.

பிறகு ஒருஸமயம் ம்லேச்சர்களால் தேவாலயங்களுக்கு உபத்திரவம் ஏற்பட்ட சமயம் அங்குள்ள பெரியோர்கள் ஸ்ரீநம்மாழ்வாரால் வீற்றிருந்த திருக்கோலத்துடன் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திருக்குறளப்பனை மிலேச்சர் கண்களுக்குப் புலப்படாமல் பக்திகரமான இடத்தில் எழுந்தருளப் பண்ணி விட்டார்கள். பிறகு மிலேச்சர் பயம் நீங்கினவுடன் அக்காலப்பெரியோர்கள் அந்த திவ்யதேசத்தில் ஸ்ரீநம்மாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட வீற்றிருந்த திருக்குறளப்பன் எங்கு தேடியும் ஸேவை ஸாதிக்காததால் நின்ற திருக்குறளப்பனை பிரதிஷ்டை செய்து விட்டார்கள் என்று தோன்றுகிறது. இன்றும் அங்கு நின்ற திருக்கோலத்துடன் ஸேவை ஸாதிக்கிறார்

அநேக நூற்றாண்டுகட்குப் பிறகு ஸ்ரீஷஷ்ட பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் காலத்தில் அவருடைய ஸ்வப்னத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் எழுந்தருளி ஸ்ரீ நம்மாழ்வாரால் மங்களாஸாசனம் செய்யப்பட்ட ஸ்ரீவீற்றிருந்தவன் எழுந்தருளியிருக்கும் ஸ்தல விசேஷத்தைக் காணபித்தருளி மறைந்தார். ஸ்வாமியும் கண்விழித்து சிஷ்யர்கட்கு ஸ்வப்னத்தை ஸாதித்தருளி ஸ்ரீபாஷ்யகாரர் நியமனப்படி யாத்திரையைத் தொடங்கினார்.

கிராமஸ்வீகாரம்

" முக்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிக்கு" மிகச் சமீபமாய் அமராவதி என்னும் ஓர் ஊரை ஒரு குருநில மன்னன் (ஜைனமதஸ்தன்) ஆண்டு வந்தான். அது

முப்பத்தாறு கிராமங்களைக் கொண்டது. ஸகல ஸம்ருத்தியுடனும் கூடியது. அந்த மன்னன் நாஸ்திகன். ஒரு ஸமயம் (சுமார் கி. மு. 101) ஔவைப்பிராட்டி என்னும் கிழவி அந்த ஊர் வழியாக வரும்போது அதிக வெய்யிலினால் அரச இல்லத்தில் களைப்பாறி தாகத்திற்கு தீர்த்தம் கேட்டாள். அங்கிருந்தவர்கள் தீர்த்தம் முதல் எந்தவித தர்மமும் செய்யக்கூடாது என்றும், தர்மங்கள் செய்வதால்தான் மனிதர்கள் சோம்பேறிகளாகிறார்கள் என்றும் அரசன் கட்டளையை விளக்கிச் சொன்னார்கள். உடன் ஔவை எழுந்து நின்று அதிக கோபத்தோடு

"ஸ்ரீபல்லவன் ஆண்டான் பலகால், மன்னான் ஆண்டான் பலகால் அமராவதி நகரமாம் நீர்வற்றியூரே" (பழமொழி விளக்கம்)

என்ற பாட்டின்மூலம் அந்த ஊரில் நீர்வற்றும்படி சபித்துவிட்டு தன் வழி சென்றுவிட்டாள். அதுமுதல் அந்த கிராமம் நீரில்லாமல் செடி, கொடி, முதலியவைகள் அழியத் தொடங்கின. நிலங்களும் தரிசுகளாயின. மன்னனும் மக்களும் கஷ்டமடைந்தார்கள். அது முதல் அந்தப் பிரதேசம் "நீர்வற்றியூர்" என்று வழங்கப்

குறிப்பு : ஔவை இந்த ஊரில் நீர் வற்றும்படி சபித்து விட்டு பளூர் என்னும் நீர் ஊற்று குறைந்த ஊர் சென்று தீர்த்த தாகத்தை தீர்த்துக் கொண்டு தனக்கு சாதம் சாப்பிட இலை வேண்டும் என்று பக்கத்திலுள்ள தோட்டக்காரனைக் கேட்க தோட்டக்காரனும் ஸந்தோஷத்துடன் வாழை இலை பரித்துக் கொடுக்க அதில் சாதம் சாப்பிட்டுவிட்டு "அழியா வாழை வடியா நீர்" என்று பாடினாளாம். அதுமுதல் அந்த ஊரில் வாழை அழியாவண்ணம் இருக்கிறதாம். கிணற்றுநீரும் வடிவது கிடையாதாம் என்றும் அவ்வூர் ஜனங்களும் சொல்லக் கேட்கிறோம்.

படலாயிற்று. அந்த பிரதேசத்தைத்தான் ஸ்ரீமதழகிய சிங்கருக்கு ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்வப்நத்தில் காட்டியருளினார்.

ஸ்ரீமதழகியசிங்கரும் அப்போது அந்த ஊருக்கு அருகாமையில் இருந்துகொண்டு அந்த ஸ்தலத்திற்கு அதிபதியான மன்னனை அணுகி நீர்வற்றின பிரதேசம் எனது பூஜைக்காக வேண்டியிருக்கிறது என்று கேட்க, அம்மன்னன மிக்க கோபத்துடன் ஸ்ரீஅழகியசிங்கரைப் பார்த்து சன்னியாசி கோலத்துடன் யாவரையும் ஏமாற்றுகிறீர். ஏதோ சூது செய்து என்னை நிர்மூலமாக்க அப்பூமியைக் கேட்கிறீர். சூன்யப்பிரதேசம் உமக்கு எதற்கு? மேலும் அது எனது பெரியோர்கள் அனுபவித்த விசேஷ ஸ்தலமாகும். ஆகையினால் அந்த ஸ்தலம் கொடுக்க இயலாதது என்று சொல்லவே ஸ்ரீமதழகியசிங்கர் மேற்படி மன்னனைப் பூர்ண கடாக்ஷம் பண்ணி எனது சிஷ்யர்களுடன் ஏழுநாள் தங்க வேண்டியிருக்கிறது. நாங்கள் வஸிக்கவேண்டிய அளவு ஸ்வல்ப நிலத்தையாவது கொடு. உனக்கு மங்களம் உண்டாகும் என்று நியமிக்க, மன்னன் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு, இந்த ப் பிரதேசமோ பாதாளலோகம் வரையில் நீரில்லாதது. பிராம்மணர்க்கு அதிலும் ஸன்யாஸிகளுக்கு ஜலம் இல்லாமல் ஒன்றுமே செய்ய இயலாது. ஒரு ஜாமகாலங்கூட வஸிக்க நிழலும் கிடையாது. ஆகையால் தானே போய்விடப்போகிறார்கள். அப்படி போகாவிட்டாலும் கூட 25 பேர்கள்தான் இருக்கிறார்கள். சொற்ப பூமிதான் கொடுக்கவேண்டியிருக்கும் என்று நினைத்து, உங்கள் சிஷ்யர்களுடன் வஸிக்கவேண்டிய அளவு பூமியை மட்டும் தருவேன்

என்று சொல்லி ஸ்ரீஸ்வாமியையும் சிஷ்யர்களுடன் அழைத்துக்கொண்டு அந்தப் பிரதேசத்திற்கு வந்து யாவரையும் உட்காரும்படி சொல்லி தன் கணக்குப் பிள்ளையிடம் பூமியின் அளவைக் குறித்துக்கொள்ளச் சொன்னான். ஸ்ரீமதழகியசிங்கர் சிஷ்யர்களை உட்காரச் சொல்லி நியமித்து ச்ரோதராசமனம் செய்து விச்வரூப மந்திரத்தை தியானிக்க விச்வரூப எம்பெருமானுடைய அனுக்ரஹவிசேஷத்தால் அந்த மன்னனின் கண்ணுக்கு எட்டினதூரம் வரையில் சிஷ்யர்கள் உட்கார்ந்திருக்கக் கண்டான். மூன்று வேதங்களையும் ஜபிக்கும் மந்திர ஒலியைக் கேட்டான். மன்னன் அதிசயித்தான். ஸ்ரீமதழகியசிங்கரின் விச்வரூப ஸேவையைக் கண்டு பீதியடைந்தான். ஸ்ரீமதழகிய சிங்கரைச் சரணடைந்தான். ஸ்ரீமதழகியசிங்கரும் பரிபூர்ணமாய் அனுக்ரஹித்தாயிற்று. மன்னன் எழுந்தான். ஆனந்தக் கூத்தாடினான். கணக்குப் பிள்ளையினால் குறிக்கப்பட்ட ஸஹஸ்ரமஹாதண்டம் என்ற கணக்கின்படி ஏற்பட்ட (1387-97) நிலத்தை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தான். ஸ்வாமியும் அந்த பூமியை ஸ்வீகரித்தருளினார்.

வருணமந்த்ரேண ஜலஸம்ருத்திகரணம்

சிஷ்யர்கள் ஜலமில்லாமல் தவித்ததை ஸ்ரீ அழகிய சிங்கர் கடாக்ஷித்து ஒரு ஸ்தலத்தில் பூமியை சிஷ்யர்களால் தோண்டச் செய்து வருணனை தியானித்து தன் மந்த்ரசக்தியினால் ஆஹ்வானம் பண்ணி ஸாந்நித்ய யாசனம் செய்து

நம்யந்து மீக்ரம் யதிவீரமபை:
கோப்ராஹ்மணேப்ய: குமலாநி ஸந்து ।

இயம் ச பூமி: ஸஜலாபிவிருத்தா
ஜலாதிநாத: ப்ரீயதாம் ஜநார்தன: ॥
(இதி ஸ்ரீஷஷ்டபராங்குசவைபவப்ரகாசிகாயாம்)

(இதன் பொருள்) இந்த ஸ்தலத்திற்கு ஏற்பட்ட சாபம் நீங்கி பசு பிராம்மணர்கள்சேஷமத்தை உத்தேசித்து இப் பிரதேசம் நீர்வளம் உடைய ஊராய் விளங்கும்படி ஜலாதிநாதனான பகவான் அனுக்ரஹிக்கவேண்டும்) என்று ஆசாஸநம் பண்ண தீர்த்தமும் அதிக ஊற்றின் மூலம் ப்ரவஹித்தது. ஸ்வாமியும் ஸந்தோஷபரிதராய் காலாநுகுணமாய் ஸங்க்ரஹேண தடாகப் பிரதிஷ்டை செய்து நித்யகர்மானுஷ்டானங்களை முடித்தருளினார்.

அதுமுதல் அந்த குளத்திற்கு ஜீயர்குளம் என்றும் ஜீயர் தீர்த்தம் என்றும் பெயர் இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறது. அந்த தீர்த்தமும் மதுரமாக இருக்கிறது. பாபத்தைப் போக்கவல்லது. ஸதாகாலமும் ஊற்றுநீர் வற்றாமல் வருணஸாந்நித்யம் உள்ளதாய் இருக்கிறது.

षष्ठः पराङ्कुश इति प्रथितः त्रिलोक्यां
यो योगिराट् खगगिरौ कुलदैवतं नः ।
अद्यापि पूजयति तेन गुरूत्तमेन
कारुण्यतो विरचितो भुवि योऽग्रहारः ॥

கிராம ப்ரதிஷ்டை செய்வதற்கு க்ஷீரவிருக்ஷ ஸமுத்பவங்களான சங்குகளை

"பூர்வாக்ரம் உத்தராக்ரஞ்ச க்ருத்வா வீதித்வயம் புந: ।
தக்ஷிணாபிமுகோ பூத்வா பூர்வவீத்யாஞ்ச நிர்கம: ॥
பஶ்சிமாபிமுகோ பூத்வா தக்ஷிணேந து நிர்கம: ।
உத்தராபிமுகோ பூத்வா பஶ்சிமஸ் ஸ து நிர்கம: ॥

ப்ராங்முகஸ்து ததோ பூத்வா ஸௌம்யவீத்யா து நிர்கம: ।
ஏவம் ப்ரகல்பிதோ க்ராம: ஸ்வஸ்திகாஹ்வய உச்யதே ॥

என்கிற ஸ்வஸ்திக கிராம ப்ரதிஷ்டாவிதாயகமான ஸ்ரீபாத்மஸம்ஹிதா ஸ்ரீபாஞ்சராத்ர வசனத்தையும், சதுர் வீதிகமுத்தமம் என்ற வைகானஸ வசனத்தையும் திருவுள்ளம்பற்றி யதாசாஸ்திரம் 1503 சரியான துந்துபி வருஷம் தை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ப்ரதிஷ்டை செய்து ஸ்ரீபாஷ்யகாரர் சொப்பனத்தில் எழுந்தருளினபடியால் ஸ்ரீபாஷ்யபுரம் என்றும், ஜல ஸம்ருத்தியுடன் கூடின கிராமம் ஆனபடியால் நீர் வளம் உள்ள ஊர் என்றும் நாமகரணம் செய்தருளினார்.

(ஸ்ரீ நம்மாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட) வீற்றிருந்தவனின் திவ்யமங்கள **விக்ரஹலாபம்**

ஸ்ரீபாஷ்யகாரர் சொப்பனத்தில் எழுந்தருளி காண்பித்த விக்ரஹத்தைக் கண்டுபிடிக்க அனேக ஸ்தலங்களைப் பரிசோதித்தும் எம்பெருமான் ஸேவை ஸாதிக்கவில்லை. ஸ்ரீஅழகியசிங்கரும் மனோ வியாகுலத்துடன் இருக்க, அன்றிரவு பகவான் சொப்ப னத்தில் எழுந்தருளினார். உதயமானவுடன் சிஷ்யர் களிடம் சொப்பன விருத்தாந்தத்தைச் சொல்லி பாலா லயம் செய்வதற்காக சிற்பியைக் கொண்டு சிலாபாலாலயவிக்ரஹம் நிர்மாணித்து ஆலயநிர்மாணம் பண்ண யத்னித்தார்.

மறுபடியும் சொப்பனத்தில் எழுந்தருளின விக்ரஹத் தைத் தேடியும் காணவில்லை. ஆனி மீ திவாதிரை அன்று சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் உபதேசம் செய்து

கொண்டிருந்த ஸமயத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஆதிசேஷன் உருக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் காலக்ஷேபகோஷ்டி யில் ஸேவை ஸாதிக்க, சிஷ்யர்கள் பாம்பு என்று அடிக்கப் போக, ஸ்ரீஅழகியசிங்கர் சிஷ்யர்களை அதட்டி இவர் ஸ்ரீபாஷ்யகாரர் என்றும் நான் அவருடன் செல்ல வேண்டியிருக்கிறது என்றும் ஸாதித்து கிளம்பிச்செல்ல ஆதிசேஷனும் முன்னமே செல்ல ஸ்ரீஅழகியசிங்கரும் ஆதிசேஷனைப் பின் தொடர்ந்தார். கொஞ்சதூரம் இருவரும் செல்ல ஸ்ரீஆதிசேஷன் ஓர் இடத்தில் படத்தால் ஏழு தடவை அடித்து விட்டு மறைந்துவிட் டார். ஸ்ரீ அழகியசிங்கர் அந்த இடத்தில் சில மந்திரங் களை ஜபிக்கும் ஸமயத்தில் சிஷ்யர்களும் ஸ்வாமி யைத் தேடிக்கொண்டு அவ்விடம் வந்துசேர்ந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் சிஷ்யர்கள் மூலம் அவ்விடத்தைத் தோண்டச் செய்ய ஆழத்தில் ஸ்ரீவீற்றிருந்தவன் ஸேவை ஸாதித்தருளினான்.

அந்தப் பிரதேசத்தை அனந்தாழ்வான் காண்பித் தருளினபடியால் அனந்தாழ்வான் தீர்த்தம் என்று நாம கரணம் செய்தருளினார். இன்றும் அப்படியே வழங்கப் பட்டு வருகிறது. சிலர் ஆழ்வார் தீர்த்தம் என்றும் வ்யவஹரிப்பார்கள். வீற்றிருந்த திருக்கோலமாய் இருந்தபடியால் வீற்றிருந்த பெருமாள் என்றும், "வாமனனே மதுசூதனனாய் கோளரியாய்" என்றும் மங்களாசாஸனம் செய்தருளினார். (மங்களாசாஸன பாசுரம் லுப்தம்) திருவாறன்விளையில் துருஷ்கர் களுக்கு பயந்து அப்புறப்படுத்தப்பட்ட எம்பெருமான் இவர்தானோ? என்று சங்கிக்கும்படி அதிக விலக்ஷண ஸந்நிவேசத்துடன் எம்பெருமான் ஸேவை ஸாதிக்கிறார்.

ஸ்ரீபாஷ்யகாரர் முதலியவர்களுக்குக் கிடைக்காத பரம லாபம் நமக்குக் கிடைத்தது என்று ஸ்ரீ அழகியசிங்கர் பரமானந்த பரிதராய் ஸாதிக்கும்படியாக இருந்ததாம். வீற்றிருந்த பெருமாளை யதாசாஸ்திரம் சிறியதோர் இடத்தில் பிரதிஷ்டை செய்து ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸந்நிதியிலிருந்து தீர்த்த பரிக்ரஹமும் செய்தருளி "வேத நால்வர் வசிக்கும் ஊர்" என்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி ருக், யஜுஸ், ஸாமம் என்று சொல்லப்பட்ட மூன்று வேதம் தெரிந்த தன்னுடன் வந்த சிஷ்யர்களை ஸ்ரீஅழகியசிங்கர் ஸ்ரீவீற்றருந்தப் பெருமானுக்கு நித்ய திருவாராதனம் முதலியகைங்கர்யங்களைச் செய்து கொண்டு அவ்வக்ரஹாரத்தில் வஸிக்கும்படி நியமித்தருளினார் என்று அக்ரஹாரவாஸிகள் சொல்லி வருகிறார்கள்.

ஆலய விமான ப்ராதுர்பாவமும் ஸ்ரீ உக்ர ந்ருஸிம்ஹாவதாரமும்


ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீபாஷ்யபுரத்தை ப்ரதிஷ்டை செய்ததும், அங்கு ப்ரதிஷ்டை செய்யப்பட்ட எம்பெருமானுக்கு ஸ்ரீபாஞ்சராத்ர விதானப்படி ஓர் ஆலயத்தை நிர்மாணிக்க ப்ரயத்நம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்போது அத்தேசாதிபதியான விஜயநகரத்தரசனின் பெண்ணை பிரம்மரசக்ஷஸ் பிடித்து ஹிம்ஸித்து வந்தது. அதைப் போக்க பல மந்த்ரவாதிகளை வரவழைத்து ஜபதபாதிகள் பண்ணியும் பிரயோஜனப்படவில்லை. மந்த்ரவாதிகள் ஜபித்துக் கொண்டிருக்கும் ஸமயம் அரசன் சென்று பார்த்தான். அப்போது பிரம்மரசக்ஷஸ் "ஓமந்த்ரவாதிகளே, உங்களால் நான் போகமாட்டேன். ஸ்ரீஅஹோபில ஸமஸ்தான துரந்தரரான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீபராங்குச யதீந்த்ர மஹாதேசிகஸ்வாமி என்னைப் போகும்படி நியமித்தால் போய்விடுவேன்" என்று சொல்லிற்று. அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் மிக்க த்வரையுடன் பாதசாரியாகவே ஸ்ரீஅழகியசிங்கர் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாஷ்யபுரத்திற்கு வந்துசேர்ந்தான். அப்போது ஸ்ரீ அழகியசிங்கரின் சிஷ்யனாயும், ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் அத்யந்த பக்தியுள்ளவனாயும், தனக்கு ஆப்தனாயும் மந்திரி ஸ்தானத்திலிருப்பவனுமான தெனாலி ராமய்யங்கார் என்பவரையும் கூட அழைத்து வந்தான். இருவரும் ஸ்ரீ அழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீராமய்யங்கார் மூலம் தனது துயரத்தை ஸ்ரீ அழகியசிங்கரிடம் அரசன் விஜ்ஞாபித்துக்கொண்டான். ஸ்ரீஅழகியசிங்கரும் மிகுந்த கருணையுடன் அவனுடைய துயரத்தை நீக்குவதாக ஸாதித்தாயிற்று. ஆகிலும் இவ்வூரில் சில காலம் இருந்து கோயிலைக்கட்டி ஸ்ரீ எம்பெருமானை பிரதிஷ்டை செய்துவிட்டு அதிசீக்ரத்தில் வந்துவிடுவதாக ஸாதித்தாயிற்று. அரசன் அதற்கு இணங்காமல் இப்போதே ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருள வேண்டும் என்றும், யாத்திரைக்கு வேண்டிய பல்லக்கு முதலியவைகளையும், பரிஜனங்களையும் அழைத்துக் கொண்டு வந்திருப்பதாகவும் விண்ணப்பித்து, தானே அக்கோயிலையும், விமானம், த்வஜஸ்தம்பம், தீபஸ்தம்பம் முதலியவைகளுடன் கட்டித் தருவதாகவும் உடனே வேலையை ஆரம்பிக்கும்படி உத்திரவு இடுவதாகவும் பிரார்த்தித்தான். ஸ்ரீஅழகியசிங்கர் ராஜாவின் பக்தி ச்ரத்தையைப் பார்த்து மிக உகந்து ஸஞ்சாரம் புறப்பட்டாயிற்று.

புறப்படுவதற்கு முன்பாக தமது சிஷ்யரும் அரசனுக்கு ஆப்தனும் மந்திரியுமான யு. ராம அய்யங்காரிடம் ஸ்ரீவாமனனுக்கு கட்டவேண்டிய ஆலயாதிகளின் விவரங்களையும், கர்ப்பக்கிருஹ, அர்த்தமண்டப, துவஜஸ்தம்பாதிகள் இருக்கவேண்டிய அளவின் லக்ஷணங்களையும், விமானம் அமைக்கவேண்டிய விதத்தையும், அதிலிருக்கவேண்டிய பிம்பலக்ஷணங்களையும் விசதமாக உபதேசித்து ஆகமசாஸ்திரங்களையும் காட்டிக் கொடுத்து ஒவ்வொன்றையும் சரியாக நிர்மாணம் பண்ணும்படி நியமித்தாயிற்று.

சில தினங்களில் விஜயநகரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அரசனும் வீதிகளை எல்லாம் நன்கு அலங்கரித்து பூர்ணகும்பம் முதலியவைகளை ஸமர்ப்பித்து ஸ்ரீஅழகிய சிங்கரை எதிர்கொண்டு வரவேற்றான். அரண்மனையில் எழுந்தருளப் பண்ணினான். ஸ்ரீஅழகிய சிங்கரும் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கலியுகத் தெய்வமான நவ ந்ருஸிம்ஹர்களுக்கும் திருவாராதனம் கண்டருளப்பண்ணி தம்முடைய கடத்திலுள்ள தீர்த்தத்தை தமது வலது கையில் சேர்த்துக்கொண்டு அதில் ந்ருஸிம்ஹமந்த்ரத்தை ஜபித்து ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசகுமாரத்தியை வரச் செய்து ஹூம்காரத்துடன் அவள்மேல் புரோக்ஷித்தார். மற்றும் தீர்த்தை எடுத்து ந்ருஸிம்ஹமந்திரத்தை ஜபித்து அதைச் சாப்பிடும்படி நியமித்தார். அத்தீர்த்தத்தை பானம் பண்ணின உடனேயே அத்தீர்த்தின் மாஹாத்மியத்தால் அந்த பிரம்மரக்ஷஸ் ஸ்ரீஅழகியசிங்கரிடம் "தனக்கு பாப விமோசனம் ஆகிவிட்டது. நான் தன்யனானேன். நான்

ஓடிப் போகிறேன்" என்று கூச்சலிட்டு பின்பு ஸ்ரீஅழகியசிங்கரை அனேகத்தடவை தண்டன் ஸமர்ப்பித்து பிரதக்ஷிணம் செய்துவிட்டு அப்பெண்ணைவிட்டு விலகிச் சென்றுவிட்டது. அரசனுக்கும் அங்குள்ளார்க்கும் இருந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. அரசன் ஸ்ரீஅழகியசிங்கரை பலமுறை தண்டன் ஸமர்ப்பித்து தன்னை சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி பிரார்த்தித்தான். எனது குலகுரு ஸ்ரீஅஹோபிலம் ஜீயர்களன்றோ என்று விஜ்ஞாபித்துக் கொண்டான். ஸ்ரீ அழகியசிங்கரும் அவ்வரசனுக்கு பஞ்சஸம்ஸ்காரம் சரணாகதி முதலியவைகளையும் செய்தருளினார். சில தினங்கள் அங்கு தங்கிவிட்டு தாம் வடதேசயாத்திரைச் சென்று பதரிகாச்ரமம் முதலிய திவ்யதேசங்களில் உள்ள எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்துகொண்டும், கங்காதி புண்ணியநதிகளில் நீராடியும் திரும்பி வருவதாகவும் அதற்குள் ஸ்ரீபாஷ்யபுரத்தில் உள்ள கோயிலைக் கட்டி பூர்த்திசெய்துவைக்கும்படியும் நியமித்தருளினார். அவ்வரசனும் ஸ்ரீஅழகிசிங்கர் நியமனத்தை சிரஸா வகித்து ஸ்ரீஅழகியசிங்கர் வடதேசயாத்திரையை பூர்த்திசெய்துகொண்டு திரும்பி எழுந்தருளுவதற்குள் ஸ்ரீபாஷ்யபுரத்தில் அழகியதோர் கோயிலைக் கட்டிவைத்தான். அங்கு விமானம் கட்டும் போது தம்முடைய பெண்ணைப் பிடித்த பிரம்மரக்ஷஸ்ஸை ஸ்ரீஅழகியசிங்கர் ஓட்டியதை ஜ்ஞாபகப் படுத்தும் சித்திரங்களையும் விமானத்தில் நிர்மாணித்திருந்தான். ஸ்ரீஅழகியசிங்கர் வடதேசயாத்திரையை முடித்துக் கொண்டு ஸ்ரீபாஷ்யபுரத்திற்கு எழுந்தருளியாயிற்று. விமானத்தையும் கோவில் அமைப்பையும் கடாக்ஷித்து மிக உகந்து நல்லதோர் நாளில் பிரதிஷ்டை செய்தருளியாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கர் தாம் வடதேச யாத்திரை செய்து ஜயசீலராய் எழுந்தருளுவதற்கும் ஸ்ரீ பாஞ்சராத்திரத்தில் "ஜலஸ்தலம் விஹாயோர்த்வம் ஆபதம் சதுரஸ்ரகம் விசித்ரபாதஸம்யுக்தம் நாம்னாமேதத் ஜயாவஹம்" என்ற வசனத்தையும் "ஸத்ரிபாதம் ஜயதம்" என்ற வைகாநஸ வசனத்தையும் "ஜயகோடிவிமாநஸ்ய, காயத்ரீ தேவதா, தத்ஸங்க்யானுகுண்யேந பிம்பமானம்" என்ற ஸஹஸ்ர விமான லக்ஷணத்தையும் திருவுள்ளம் கொண்டு



போலும் இவ்விமானத்திற்கு ஜெயகோடி விமானம் என்று நாமகரணம் சாத்தியாயிற்று.

ஸ்ரீபாஷ்யபுரத்தில் நீர்வளத்தையும் ஸன்னதி அமைந்தவிதத்தையும் எம்பெருமானின் திருமேனி ஸௌந்தர்யத்திலும் லயித்து பத்து ஸம்வத்ஸரம் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீஅழகியசிங்கர் அங்கு கோயில் கொண்டு இருக்கும் எம்பெருமானை துருஷ்கர்கள் முதலியவர்களின் பயத்தால் திருவாராதனமின்றி பூமியில் எழுந்தருளச்செய்திருக்கக்கூடும். இனி அவ்விதம்

நடவாவண்ணம் அஷ்டபுஜங்கள் கூடிய உக்ரந்ருஸிம்ஹனை ரக்ஷார்த்தம் இங்கு பிரதிஷ்டை செய்கிறோம். இவரால் பயம் நீங்கி க்ஷேமம் உண்டாகும் என்று ஸாதித்து ஸ்ரீந்ருஸிம்ஹனையும் உத்ஸவ மூர்த்தியாக பிரதிஷ்டை செய்தருளியாயிற்றாம். அதனால்தான் 17ல்



ஔரங்கசீப்- நவாப் காலத்தில் உண்டான கலஹத்தில் ஸ்ரீபாஷ்யபுரம் காஞ்சிக்கு அதிஸமீபமிருந்தும் இக் கோயிலுக்கோ இவ்வூருக்கோ எவ்விதக் கெடுதியும் உண்டாகவில்லை என்றும் இவ்வூர் பெரியோர்கள் சொல்வார்கள்.

ஸ்ரீஅழகியசிங்கர் தாம் ஸ்ரீபாஷ்யபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது அவரால் ஆரம்பித்து அனுஷ்டித்த முக்கிய உத்ஸவங்கள் -

அவதாரமஹோத்ஸவம் 1

இந்த உத்ஸவம் தை புஷ்யம் ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்திரமான பூரட்டாதி

யன்று அவர் திருநக்ஷத்ரம் செய்து உத்ஸவ ஆரம்பத்தை விக்ஞாபித்துக்கொள்ளல்.

உத்திரட்டாதியில் ஆரம்பித்து புஷ்யத்தில் பத்து நாளில் முடிவடையும். பத்தாம் நாளான புஷ்யதினத் தன்று இரவு 12 நாழிகைக்குமேல் ஸ்ரீபராங்குச ஆராதனம் என்று சொல்லப்பட்டு திருமஞ்சனம், திரு வாராதனம் முதலியவைகள் நடந்தேறும். இன்றும் அன்றையதினம் இச்சன்னதிக்கு ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ரமஹாதேசிகன் எழுந்தருளி திருவாராதனம் பண்ணுவதாகவும், அன்றைய தீர்த்த விநியோகம் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் ஸர்வ கார்யார்த்த பலப்ரதமாகவும் இருக்கும். இப்பவும் அப்படியே நடந்து வருகிறது.

ஸ்ரீராமநவமி 2 (பல்லவோத்ஸவம்)

ஸ்ரீபாஷ்யபுரத்தில் கோவில் கட்ட ஆரம்பிக்கும் போது மிகச் சமீபமாய் உள்ள ஊரில் பல்லவரால் கட்டப்பட்ட ஸ்ரீராமன் ஸன்னதி வைஷ்ணவவிரோதி களால் அழிக்கப்பட்டு கிலமாயிருந்ததை அவ்வூர் வாஸிகள் அத் தேசாதிபதியிடம் தாங்கள் கட்டும் கோயிலை இக்கற்கள் வீணாயிருப்பதால் இதைக் கொண்டு அமைக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்க, மன்னனும் ஸ்ரீஅழகிய சிங்கர் நியமனம் பெற்று அக்கற்களைக்கொண்டு கோயிலைக் கட்டிவைத் தானாம். கற்களில் பல்லவச் சின்னங்களும் ஸ்ரீராம ஆஞ்சநேய சின்னங்களும் இருந்ததால் பல்லவரால் கட்டப்பட்ட ஸ்ரீராமபிரான் ஞாபகார்த்தம் ஸ்ரீராமநவமி மஹோத்ஸவத்தைப் பல்லவோத்ஸவம் என்று கொண்டாடுகிறார்கள். தைபுஷ்ய கடைசி தினத்தன்றும்

பிரதி புஷ்யங்களிலும் "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்ற பாசுரங்களையே நாளதுவரையில் ஸ்ரீஅழகியசிங்கர் நியமனப்படி சாற்று மறை பண்ணி வருகிறார்கள்.

திருவாடிப்பூரம் 3

ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம் ரொம்பவும் விமர்சையாக நடந்துவருகிறது.

கோபுர பிராதுர்பாவம்

வங்காளதேசத்தை ஒரு மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு வெகுநாள் குழந்தைகள் பிறக்கவில்லை. அநேக தீர்த்தாடனங்கள் செய்தான். திருப்புக்குழி ஸ்ரீ விஜய ராகவனையும் ஸேவித்தவிட்டு, காஞ்சீபுரத்தில் ஸ்ரீ தேவப்பெருமாளை ஸேவிக்கும்போது அங்குள்ள பெரியோர்கள் ஸ்ரீபாஷ்யபுரத்தில் ஆறாவது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கரால் கட்டுவித்து பிரதிஷ்டை செய்யப் பட்ட ஸ்ரீவீற்றிருந்தப்பெருமாளின் விமானப் பிரத க்ஷிணம் செய்தால் புத்திர தோஷம் நீங்கி குழந்தைப்

குறிப்பு :- ஸ்ரீஅழகிய சிங்கர் உக்ரந்ருஸிம்ஹன் மிகச் சக்தி வாய்ந்தவர். ஆனதால் இவரை வீதிகளில் எழுந் தருளப் பண்ணும் போது சில நியமங்கள் நியமித்தா யிற்று.

1. பஞ்சஸம்ஸ்காரம் செய்துகொண்டவர்கள்தான் நியமத்துடனும் பயபக்தியுடனும் எம்பெருமானை வீதியில் எழுந்தருளப் பண்ண லாம். அன்னியர்கள் தோளுக்கனியானை தொடுவதுகூட கூடாது.

2. சத்திர சாமராதிகளும் முன் நியமத்தை அனுஸரித்துதான் அக்கைங்கர்யம் செய்யலாம்.

3. ஸ்ரீஸன்னதி தீவட்டி கைங்கர்யமும் அப்படியே. இன்னும் அப்படியே நடந்துவருகிறது.

பிறக்கும் என்று சொல்லக்கேட்டு ஸ்ரீ பாஷ்யபுரம் வந்தான். பிரதக்ஷிணம் செய்தான். அவன் மனைவி யும் ஜீயர்குளத்தில் நீராடி பிரதக்ஷிணம் செய்தாள். பிரம்மரக்ஷஸ் இருந்த இடத்தில் வரும்போது அரசி யின் புத்திரபிரதிபந்தக வேதனைகள் குறைந்தன. இருவரும் எங்களுக்கு குழந்தை பிறந்தால் இராஜ கோபுரம் கட்டுவதாகப் பிரார்த்தனை செய்கொண்டு போய்விட்டார்கள். அதுமுதல் அரசி கர்ப்பம் தரித்து ஒரு நன்னாளில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தையின் பதினாறு வயது வரையில் ஸ்ரீ வீற்றிருந்தவன் பிரார்த்தனையை மறந்தான். அப்போது அச்சிறுவனுக்கு சூலரோகம் சம்பவித்தது. அநேக வைத்தியங்கள் செய்தும் பிரயோஜனப்பட வில்லை. பிறகுதான் ராஜகோபுர கட்டும் ஸ்ரீ வீற்றிருந்தவன் பிராாத்தனை நினைவிற்கு வந்தது. அரசியும் மிக விசனத்துடன் காணிக்கை எடுத்து முடித்துவைத்து தன் புருஷனிடம் உடனே இராஜகோபுர வேலைத் துவக்க யத்தனிக்கும்படி பல முறை வேண்டிக்கொண்டாள். மன்னனும் தூதுவன்மூலம் அனேக ஆயிரம் ரூபாய்களை கொடுத்து ஸ்ரீ பாஷ்யபுரம் அனுப்பினான். தூதுவனும் மிகத்துரிதமாய் ஸ்ரீ பாஷ்ய புரம் சேர்ந்து ஸ்ரீ வீற்றிருந்தவன் தேவஸ்தான தர்மகர்த்தாக்களிடம் அரசக் கடிதத்தைக் கொடுத்தான். தர்மகர்த்தாக்கள் அரச சாசனத்தைப் படித்து, தூதவ னிடம் இராஜகோபுரம் கட்டுவதானால் அசேஷதர்ம கர்த்தா அங்கத்தினர் களின் கூட்டம் கூட்டப்பட வேண்டும். பிறகு ஸ்ரீஅழகியசிங்கர் நியமனம் பெற வேண்டும் என்றும், பிறகுதான் இராஜகோபுரம் கட்ட அனுமதிக்கப்படும்

என்று சொல்ல, தூதுவன் தன் அரசனுக்கு பிரதிட்டிஷ் அரசாங்கத்தில் நல்ல செல் வாக்குண்டு என்றும் மனது வைத்தால் இத்தேவஸ்தானத்தையே தன் ஸ்வாதீனம் செய்துகொள்ள இயலும் என்று சொல்ல, தர்மகர்த்தாக்கள் "அது வீற்றிருந்தவன் திருவுள்ள மானால் அப்படியே நடக்கக்கட்டும் என்று சொன்னார்கள். தூதுவனும் மிகக் குபிதனாகி வங்காளதேசத்தை அடைந்து மன்னனிடம் தான் போயிருந்தசெய்தியைச் சொல்லினான். அரசனும் சென்னை துரைத்தனத்தின் உதவியைக் கொண்டு அனேக சிற்பிகளை ஸ்ரீபாஷ்யபுரம் அனுப்பி இராஜகோபுரம் கட்ட ஆரம்பித்தான். பிரஸ்தராப்தம் கோபுரம் முடிவதற்குள் சிறுவன் இறக்கும் நிலை உண்டாய் விட்டது.

அரசதம்பதிகள் மிக வருந்தி தர்மகர்த்தாக்களின் அனுமதி இல்லாததுதான் இதற்குக் காரணமாய் இருக்கக் கூடும் என்று நினைத்து குழந்தையையும் எடுத்துக்கொண்டு சிறிய பரிவாரங்களுடன் கிளம்பி ஸ்ரீபாஷ்யபுரத்திற்கு அருகாமையில் வரும்போது குழந்தை இறந்துவிட்டது. அப்போது ஸ்ரீபாஷ்யபுரத்தில் ஸ்ரீஅஹோபிலமடம் 25-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் எழுந்தருளியிருந்தார். எம்பெருமானுக்குத் திருவாராத னம் முடிக்கும் ஸமயத்தில் ஸ்ரீவீற்றிருந்த பெருமாள் கோயில் தர்மகர்த்தாவைக் கூப்பிட்டு சமீபதூரத்தில் வங்காளமன்னனும் அவன் பரிவாரங்களும் வங்காள மன்னனின் குழந்தை இறந்துவிட்டதாய் நினைத்து அழுதுகொண்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்து வாரும். குழந்தை இறக்கவில்லை. அவனை உயிர்ப் பிக்க வீற்றிருந்தவன் திருவுள்ளம் இருக்கிறது என்று

நியமிக்க தர்மகர்த்தாவும் மிக பயந்து கொஞ்சதூரம் செல்ல, அங்கு ஓர் அரசகுடும்பம் விசனத்தோடு இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு ஸ்ரீஅழகிய சிங்க ரின் மந்த்ரப்ரபாவத்தைஎண்ணி ஆனந்தப்பட்டு மன்ன னிடம், எம் குலகுரு ஸ்ரீஅஹோபிலமடம் ஸ்ரீஅழகிய சிங்கர் இக்குழந்தையை உயிர்ப்பிக்க உடன் அழைத்து வரும்படி நியமித்திருக்கிறார். யாவரும் அதிசீக்கிர மாக வரவேண்டும் என்று சொல்ல, எல்லோரும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீவீற்றிருந்தவன் கோயிலை அடைந் தார்கள். ஸ்ரீஅழகிசிங்கர் தன் கடத்தில் உள்ள தீர்த்தத்தை எடுத்து அபிமந்திரித்து குழந்தையின் மேல் ப்ரோக்ஷித்து மறுபடியும் தீர்த்தத்தை எடுத்து அபிமந் திரித்து தீர்த்தத்தை வாயைத் திறக்கச் செய்து வாயில் ஊட்ட இரண்டு நிமிடத்திற்குள் சிறுவன் கண் திறந்து பார்த்தான். யாவரும் ஆனந்தப்பட்டார்கள். மன்ன னைக் கூப்பிட்டு ஸ்ரீஅழகியசிங்கர், மந்திரபலிஷ்ட ரான வசிஷ்டமுனிவரால் கௌசிக அரசன் பலமுறை அவமானப்பட்டதை நினைத்துப் பார்க்காமல் அஹங்காரப்பட்டாய். உன் சந்ததி அழிந்துவிடவேண் டிய நிலைமையில் உன் பெரியோர்கள் செய்த புண் ணிய பலத்தால் இப்புண்ணிய சன்னதியை நோக்கி வந்தபடியால் உன் குழந்தையையும் உயிர்ப்பித்தோம். ஆகிலும் உன்னால் கட்டப்பட்ட இந்த இராஜகோபுரம் தேவர்க்குப் பிறகு புரோக்ஷணாதிகளும் செய்யக் கூடாது. கதவுகளையும் சாத்தக்கூடாது. அப்படி சாத் தினால் அது அமங்கள ஸூசகமாகும். இக்கோபுரம் இப்படியே குறையாக யாவருக்கும் படிப்பினையாக யிருக்கவேண்டும் என்று ஆஜ்ஞாபித்தார். மன்னனும் தன் மனைவியுடனும் சிறுவனிடனும் அனேகத்தடவை

ஸ்ரீஅழகியசிங்கரையும் வீற்றிருந்தவனையும் பிரதக்ஷிணப் பிரணாமங்கள் செய்து மந்திராக்ஷதைப் பெற்றுக்கொண்டு தன்னூர் சென்றான். அதுமுதல் இன்றுவரை கோபுரக் கதவுகள் சாத்துவது கிடையாது. இது கர்ணபரம்பரைச் செய்தியை யொட்டி ஸங்க்ரஹிக் கப்பட்டது.

விமான தீபாரோபணம்

"பராங்குச யதீந்த்ரேண ஸ்தாபிதம் புவி விச்ருதம் ।
ஸ்ரீபூமிஸஹதைம் தேவம் வந்தே வாமனரூபிணம் ॥

மந்த்ரமாஹாத்ம்யரூபஸ்ய விமாநஸ்ய சுபே பதே ।
தீபஸம்யோஜநாத் ஜ்ஞானம் புத்ரலாபோ பவேத் ந்ருணாம்॥

அபுத்ரா லபதே புத்ரம் துர்பகா ஸுபகா பவேத் ।
தர்சநாத் ஸ்மரணாச்சைவ குஷ்டரோகோபி நச்யதி ॥"

(ஓலைச்சுவடியின் குறிப்பு)

1760 -ம் வருஷம் முதல் திருவாராதனம் பண்ண மநுஷ்யாள் இல்லாமலும் வெகு சிரமப்பட்டு திருவாரா தனம் நடந்துகொண்டு வந்தது. 1780 -ம் வருஷம் 25-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் ஸ்ரீபாஷ்யபுரம் எழுந் தருளியிருந்த ஸமயம் விக்ஞாபிக்க, ஸ்ரீமதழகியசிங்கர், ஊரில் சிலருக்கு மூர்ச்சா வியாதி உள்ளதா? சிலருக்கு குஷ்டரோகம் உள்ளதா? இதுமுதலான குறைகளைக் கேட்க, எல்லோரும் அது வாஸ்தவம் என்று ஒத்துக் கொள்ள ஸ்ரீஅழகியசிங்கரும் தியானித்து இது விமா னத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிரம்மரக்ஷஸ்ஸின் காரியம் என்றும், அதற்கு நேராக தீபம் ஏற்றிவைத்தால் தீப

தர்சனத்தால் யாவும் விலகும் என்று நியமித்தாயிற்று. அதுமுதல் அந்த இடத்தில் தீபம் ஸமர்ப்பிக்கப்பட்டு வந்தது. 1906-ம் வருஷத்தில் தர்மகர்த்தா நடவடிக்கைக் குறிப்பிலருந்து எழுமபப்பட்டது.

வாமனஸ்யைவ லசஷ்மீநாராயணத்வம்

8-2-1895 -ம் வருடம் தமிழ் ஜய வருஷம் தை புஷ்யத்தன்று தாயார் ஸன்னதி கட்டுவதற்கு தீர்மானித்து வேலைகளும் துவக்கி சுமார் 1200/- ரூபாய் வரை செலவு செய்ய, அப்போது அவ்வூரில் உள்ள ஒரு பெரியவருக்குச் சொப்பனத்தில் பகவான் எழுந்தருளி "தான் லசஷ்மீநாராயணன் என்றும், லசஷ்மியைவிட்டுப் பிரியாதவன் என்றும், "க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வசஷ:ஸ்தலாலயாம்" என்றபடி வாமனனாய்ச் சென்றபோது க்ருஷ்ணாஜிநத்தினால் உலகத்தவர் கண்களுக்குத் தெரியாமல் என் மார்பில் மறைத்துக்கொண்டு என்னைவிட்டுப் பிரியாமல் வைத்துக்கொண்டிருக்கிறேன். இன்றும் அவ்வண்ணமே. தாயாருக்குத் தனிக்கோயில் கட்டவேண்டாம்" என்று நியமிக்க உதயமானவுடன் தர்மகர்த்தாக்களை ஒன்று சேர்த்து தன் சொப்பன விருத்தாந்தத்தைச் சொன்னார். தர்மகர்த்தாக்கள் அந்த வயோதிகர் சொப்பனத்தில் அதிசங்கை பண்ணி திருவிளக்குச் சீட்டின்மூலம் பகவந்நியமனத்தை அறிய முடிவு செய்து அதன்படி திருவிளக்குச் சீட்டுபோட அச்சமயம் மூலவரிடமிருந்து ஒரு ஸர்ப்பம் சீறிக்கொண்டு வந்து ஒரு சீட்டைக் கௌவிக்கொண்டு போய்விட்டது. யாவரும் அதிசயித்து கைக்கூப்பி இவர் பாஷ்யகாரரோ என்று ஸந்தேஹித்து பயபக்தியுடன் கீழே விடப்பட்ட

சீட்டுதான் பகவந்நியமனம் என்று தீர்மானித்து அந்த சீட்டை யெடுத்துப் பார்க்க தாயார் ஸன்னிதிக் கட்ட நியமனமில்லை என்று எழுதி யிருந்தது. அதுமுதல் சீட்டுப்போட்டுப் பார்க்கும் பழக்கம் இத்தேவஸ்தானத்திற்கு ஏற்பட்டது. கட்டின கட்டிடத்தைப் பிரித்து முன் மண்டபம் கட்ட தீர்மானித்து அதன்படி கட்டி முடித்து ஸம்ப்ரோக்ஷணமும் நடந்தேறி யது. அதுமுதல் தேவஸ்தானம் ஸ்ரீவீற்றிருந்த லசஷ்மீநாராயணப் பெருமாள் தேவஸ்தானம் என்று பேர் வழங்கி வருகிறது.

ப்ரார்த்தனைகள்

1. புத்ரதோஷமுள்ளவர்கள் வீற்றிருந்த பெருமாளுக்கு அர்ச்சனை செய்து யதாசக்தி உண்டியலில் காணிக்கை ஸமர்ப்பித்து

"ஸ்ரீஷஷ்டபராங்குசயதீந்த்ரமஹாதேசிகாய நம:"
"ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:"
"ஸ்ரீலக்ஷ்மீநாராயண பரப்ரஹ்மணே நம:"

என்ற இம்மூன்று மந்த்ரங்களையும் ஜபித்துக் கொண்டு 24 பிரதக்ஷிணம் செய்யவும். விமானத்தில் உள்ள பிம்பங்களுக்காக தீபம் ஸமர்ப்பிக்கவும். ஏழு நாள் ஸேவை செய்தால் சொப்பனம் ஆகும். புத்ரதோஷம் நீங்கி ஸந்தானம் உண்டாகும்.

2. பரீக்ஷையில் வெற்றிபெற முன் சொன்ன மூன்று மந்த்ரங்களையும் 1008 தடவை எழுதி தானம் பண்ணவும். ஸ்ரீஹயக்ரீவன் கிருபையால் வெற்றி உண்டாகும்.

3. ருணவிமோசனம்: இதில் சொல்லிய ஸ்தோத்ரத்தை ஒரு மண்டலம் ஜபிக்கவும். ஸித்தியாகும்.

4.ரோகநாசனம் : ஜீயர் தீர்த்தம் கொண்டுவந்து முன் சொன்ன மூன்று மந்த்ரங்களையும் ஜெபித்து சாப்பிடவும். அதி ஆச்சர்யமான பலன் கிடைக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீலக்ஷ்மீநாராயண ஸ்தோத்ரம்

श्रीमच्छठारिमुनिपादसरोजहंसं
श्रीमत्परांकुशतपोधनलब्धबोधम् ।
श्रीमन्नृसिंहवरदार्यदयावलम्बं
श्रीमत्परांकुशमुनिं प्रणतोऽस्मि नित्यम् ॥

क्रीडाभिन्नहिरण्यकुक्षिकुहरे रक्तात्मजावस्थितान्
हारं हारमपूर्वकुंकुमरसानव्याजसिद्धाञ्जनैः ।
वीरश्रीकुचकुम्भसीम्नि लिखितो वीरस्य पत्रावलीः
तत्कालोचितभावबन्धमधुरं मन्दस्मितं पातु नः ॥

नमस्तस्मै नृसिंहाय श्रीभाष्यपुरवासिने ।
महालक्ष्मीसमेताय नृसिंहाय नमो नमः ॥

श्रीभाष्यनगराधीशस्सर्वाभीष्टफलप्रदः ।
लक्ष्मीनारायणः श्रीमान् श्रेयसे मेऽस्तु भूयसे ॥

जयकोटिविमानस्थं सर्वेषां जयकारणम् ।
लक्ष्मीनारायणं देवं वन्दे श्रीभाष्यभूपतिम् ॥

परांकुशयतीन्द्रेण स्थापितं भुवि विश्रुतम् ।
श्रीभूमिसहितं देवं वन्दे वामनरूपिणम् ॥

व्याघ्रासुरनिहन्तारं भक्ताभीष्टफलप्रदम् ।
मुक्तिदं भुक्तिदं देवं वन्दे श्रीभाष्यभूपतिम् ॥

लक्ष्मीद्वयसमेताय नमो वामनमूर्तये ।
श्रीनृसिंहस्वरूपाय भीषणाय नमो नमः ॥

मन्त्रमाहात्म्यरूपस्य विमानस्य शुभे पदे ।
दीपसंयोजनात् ज्ञानं पुत्रलाभो भवेन्नृणाम् ॥

परांकुशाख्यतीर्थस्य सेवनाद्भक्तिमान्नरः ।
सर्वरोगविनिर्मुक्तः दीर्घमायुश्च विन्दति ॥

लक्ष्मीनारायणस्तोत्रं यः पठेद्भक्तिमान्नरः ।
सर्वान् कामानवाप्नोति मोक्षसांराज्यमाप्नुयात् ॥

॥ इति श्रीलक्ष्मीनारायणस्तोत्रं संपूर्णम् ॥

தேவஸ்தான நிர்வாஹ நிர்ணயம்

1892-ல் தர்மகர்த்தாக்களுடன் சில மனஸ்தாபம் ஏற்பட்டு திருவாராதனங்கள் மிகக் கஷ்டப்பட்டு நடந்து வந்தன. ஸ்ரீஅஹோபில மடத்தில் 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த பரந்தூர் (அழகியசிங்கரின்) ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனின் பெருமுயற்சியின் பேரில் 13-1-1894 ஒரு தர்மகர்த்தா உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டு தஸ்தாவேஜும் முன்னிலைக்கு இத்தேவஸ்தானக் காரியங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டு நடந்துவருகின்றன.

முடிவுரை

ஸ்ரீ ஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் கரளபாக்கம் என்னும் ஸ்ரீகிராமத்தில் வங்கீபுரம் ஸ்ரீபிரணதார்த்தி ஹராச்சார் ஸ்வாமிக்கு திருக்குமாரராக அவதரித்து (1469-ஆம் ஜனவரி காளயுக்தி தை மாதம் ஸ்ரீஅஹோபில மடத்தில் 6-வது பட்டத்தில் பட்டாபிஷேகம் செய்தருளி 1513-பிப்ரவரி ஆங்கீரஸ மாசி மாதம் ஸ்ரீஅஹோபிலம் குஹையின் மூலம் ஸ்ரீந்ருஸிம்ஹனி டத்தில் ஐக்யமானார் என்று ஊகிக்க முடிகிறது.

மொத்தம் 14 வருஷம் 1 மாதம் ஆஸ்தான நிர்வாஹ காலம் என்று ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா மூலம் தெரிய வருகிறது. அந்த 14 ஸம்வத்ஸரம் ஒரு மாதத்தில் பத்து ஸம்வத்ஸரம் ஸ்ரீபாஷ்யபுரத்தில் எழுந்தருளியிருந்தார் என்று குருபரம்பரையில் சேவிக்கிறோம். அந்த பாஷ்யபுரம்தான் இந்த கிராமம் என்பதும் நிர்விவாத விஷயமாகும்.

ஸ்ரீஷஷ்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் பத்து ஸம்வத்ஸரம் எழுந்தருளி இருந்த இடம் காலி மனையாக இருக்கிறது. ஆசிரமம் என்ற பேர்மட்டும் இன்றுவரை சொல்லி வருகிறார்கள். அந்த இடத்தில் ஒரு மண்டபம் கட்டி அதில் வித்வத்ஸதஸ் ஸ்ரீஅழகியசிங்கர் ஜ்ஞாபகார்த்தமாக நடத்த ஸ்ரீஅழகியசிங்கரும் ஸ்ரீவீற்றிருந்தவனும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனும் அருள்புரிவார்களாக.

मङ्गलं श्रीनृसिंहाय सर्वलोकहितैषिणे ।
श्रीमद्भाष्यपुरीशाय श्रीनिवासाय मङ्गलम् ॥